[2022 ஏப்ரல் 12

97—

தார்ச் சாலை

***1811—திரு. A. நல்லதம்பி**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், கொடுமாம்பள்ளி முதல் ஜவ்வாதுமலை சேர்கானூர் வரை தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், கொடுமாம்பள்ளி முதல் ஜவ்வாதுமலை சேர்கானூர் வரை வனப் பகுதியில் புதிய தார்ச் சாலை அமைப்பதற்கு, ஆலங்காயம் வட்டார வளர்ச்சி அலுவலரால் உரிய இணையதளத்தில் தேவையான விவரங்களுடன் மனுவினை பதிவேற்றம் செய்தபின், உரிய நடவடிக்கை எடுப்பதற்கு மனு அனுப்பப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி அவர்கள்.*

முற்பகல் 10—20

திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். திருப்பத்தூர் தொகுதி என்பது, பழங்குடியின மக்கள் வாழுகின்ற பின்தங்கிய பகுதியாகும். பெரும்பான்மையான கிராமங்கள் போதிய சாலை வசதியின்றி, மருத்துவமனைகளுக்குச் செல்வதற்குக்கூட நோயாளிகளைத் தூளி கட்டி தூக்கிச் செல்கின்ற நிலை உள்ளது. சமீபத்தில் புளியூர் கிராமத்தில் சேம்பரை ஆஞ்சநேயர் கோயிலுக்கு வழிபாட்டிற்காகச் சென்ற மலைவாழ் மக்கள் பயணித்த வாகனம் தடம் புரண்டு 11 பெண்கள் உயிரிழந்தனர்; 26 பேர் காயமடைந்து சிகிச்சை*

2022 ஏப்ரல் 12]

பெற்ற துயரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இப்பகுதிக்கு சீரான சாலை வசதி இல்லாததும் ஒரு காரணமாகும். நான் கோருகின்ற கொடுமாம்பள்ளி முதல் ஜவ்வாதுமலை சேர்கானூர் வரை தார்ச் சாலை அமைக்க வேண்டுமென்பது அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை. தமிழ்நாடு முழுவதும் வனத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் புதிய சாலை அமைக்கப்பட வேண்டுமானால், அனுமதி பெற பயனீட்டாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அல்லது நெடுஞ்சாலைத் துறையின் வாயிலாக விண்ணப்பித்து அதற்கு வனத் துறை அனுமதி வழங்க பல ஆண்டுகள் ஆகின்றன. தமிழகத்தில் உள்ள அனைத்து மலைப்பிரதேசங்களிலும் இப்பிரச்சினை உள்ளது. உடனடியாக அனுமதி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டு சென்று அதிலுள்ள சிக்கல்களைக் களைந்திடவும், நான் கோருகின்ற கொடுமாம்பள்ளி—சேர்கானூர் சாலையை வட்டார வளர்ச்சி அலுவலர் விண்ணப்பித்தவுடன் விரைவில் அனுமதி வழங்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாலை அமைத்துத் தருவார்களா என்று கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் மாவட்டத்திற்குட்பட்ட திருப்பத்தூர் ஒன்றியம், கொடுமாம்பள்ளி முதல் ஜவ்வாதுமலை சேர்கானூர் வரையுள்ள வனப் பாதை, திருப்பத்தூர் வனக் கோட்டத்திலுள்ள ஆண்டியப்பனூர் காப்புக் காடு வழியாகச் செல்கிறது. இந்தப் பாதையானது 4.2 கிலோ மீட்டர் நீளமுள்ளது. இந்தப் பாதையை தார்ச் சாலையாக மாற்றுவதற்கு ஒரு ஹெக்டேருக்குமேல் வன நிலம் தேவைப்படுவதால், வனப் பாதுகாப்புச் சட்டம், 1980—ன்படி, ஒன்றிய அரசின் ஒப்புதலைப் பெற வேண்டும். திருப்பத்தூர் வனக் கோட்டத்திலுள்ள ஆண்டியப்பனூர் காப்புக் காட்டிலுள்ள இந்தச் சாலை சேர்கானூர் பெரும்பள்ளி, நல்லாட்டூர் மற்றும் சின்னசிட்டனூர் கிராமங்கள் வழியாகச் செல்கிறது. மேற்கூறிய கிராமங்களில் சுமார் 3,500—க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருவதாகத் தெரிய வருகிறது. எனவே, இந்தக் காப்புக் காட்டிலுள்ள வனச் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றியமைப்பதற்குத் தேவையான முழு விவரங்களுடன், உரிய இணையதளத்தில் உடனடியாக சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி*

அலுவலர் பதிவேற்றம் செய்ய வேண்டும். இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட பின்னர், வனத் துறைமூலம் ஒன்றிய அரசின் அனுமதியைப் பெறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அனுமதி பெற்றவுடன் மேற்கூறிய தார்ச் சாலை அமைக்க அனுமதி வழங்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நீங்கள் ஒரு வருடம் ஆகிறது என்று கூறியது தவறான விஷயம். Application–ஐ அனுப்புகிறார்கள். அந்த application–ல் முழு விவரங்களையும் நீங்கள் அனுப்புவதில்லை. முழு விவரங்களும் வரவில்லையென்று சொன்னால், நாங்கள் அந்த application–ஐத் திருப்பி அனுப்பி, அவர்களிடம் விவரம் கேட்க வேண்டியதாக இருக்கிறது. வந்த பின்னர், அதை ஒன்றிய அரசுக்கு அனுப்ப வேண்டும். ஒன்றிய அரசிடம் order வாங்க வேண்டியிருக்கிறது. நிச்சயமாக, எந்த அளவிற்கு விரைவாகச் செய்ய முடியுமோ, அந்த அளவிற்கு விரைவாக இந்தப் பணி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி அவர்கள்.

திரு. A. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. ஜவ்வாதுமலை, போளூர் என்ற இடத்தில் 33/11 KV திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கப்பட்டது. கடந்த மூன்றாண்டுகளுக்குமுன் எதிர் வரிசையில் அமர்ந்துள்ள நம்முடைய முன்னாள் மின்சாரத் துறை அமைச்சராக இருந்த திரு. தங்கமணி அவர்களின் முன்னிலையில் அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொளி வாயிலாக அது துவக்கி வைக்கப்பட்டது. அந்தத் துவக்க விழாவிற்கு நானும் சென்றிருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.

திரு. A. நல்லதம்பி: 3 ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்டுள்ள துணை மின் நிலையம், மின்பாதையில்லாமலே துவக்கப்பட்டது. இதற்கு மின்னிணைப்பைக் கொண்டு செல்வதற்காக வனத் துறையின் சார்பில் 70 மின் கம்பங்கள் அமைக்கப்பட வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியின் காரணமாக, மின்சார வாரியத்தின் மூலமாக, வனத் துறைக்கு

2022 ஏப்ரல் 12]

1 கோடியே 12 இலட்சம் ரூபாய் பணம் செலுத்தப்பட்டுள்ளது. ஆகவே, இந்த மின் பாதையை அமைப்பதற்கு மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தத்தில், ரோடு, மின்சாரம் மற்றும் மின் கம்பங்கள் அமைக்க வேண்டுமென்று கேட்டு வந்த 70* applications *என்னிடம் இருக்கின்றன. இந்த 70* applications*–ல், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை மூலமாக 25* applications *வந்திருக்கின்றன. நெடுஞ்சாலைத் துறை மூலமாக வந்தது 34* applications*; தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையம் வழியாக வந்தது 11* applications*. இப்படி 70* applications *இருக்கின்றன. அதிலிருக்கிற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக பயனீட்டாளர்களிடம் கிட்டத்தட்ட 41* applications*–ஐ திருப்பிக் கொடுத்திருக்கிறோம். அதேமாதிரி வன அலுவலர்களிடம் 13* applications *இருக்கின்றன; வனப் பாதுகாவலரிடம் 4* applications *இருக்கின்றன; முதன்மை வனப் பாதுகாவலர் இடத்தில் 4* applications *இருக்கின்றன. எங்கள்* Secretary*–யிடம் 8* applications *இருக்கின்றன. இவை எல்லாவற்றையும் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக இதைச் செய்து தருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடத்தில் என்ன பிரச்சினை என்பதைப் பார்த்து, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு திரு. பெ.சு.தி. சரவணன் அவர்கள்.*

திரு. பெ.சு.தி. சரவணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய போளூர் ஒன்றியம் மற்றும் ஜவ்வாதுமலை ஒன்றியத்தை இணைக்கும் சந்தவாசல் செண்பகதோப்பு அணை வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. அந்தச் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. அந்தச் சாலையும் மற்றும் அமிர்தி முதல் ஜவ்வாதுமலை வரை உள்ள வனத் துறைக்குச் சொந்தமான*

சாலையும் மிகவும் பழுதடைந்துள்ளன. அமிர்தி, ஒரு சுற்றுலாத் தலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. ஜவ்வாதுமலையில் உள்ள சுமார் 150 கிலோ மீட்டர் சாலைகளும் பல ஆண்டுகளாக போடப்படாமல் உள்ளன. வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இந்தச் சாலைகள் இந்த நிதியாண்டில் அமைத்துத்தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையின் கட்டுப்பாட்டில் 3,425 கிலோ மீட்டர் சாலைகள் உள்ளன. அந்தச் சாலைகளைச் சரி செய்வதற்கு இந்த வருடம், நிதித் துறையின்மூலம் நிதி பெற்று, எந்த அளவிற்கு நிதி ஆதாரங்கள் கிடைக்கின்றனவோ, அந்த அளவிற்கு சாலைகள் எடுக்கப்பட்டு, அந்தப் பணிகள் முடித்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில், குன்றத்தூர் வட்டத்தில், சோமங்கலம் சாலையும், ஸ்ரீபெரும்புதூர் மாங்கான்னியம் சாலையும் போடுவதற்கு 7, 8 மாதங்களுக்கு மேல் வருவாய்த் துறை அனுமதி கேட்டும், வனத் துறை இதுவரை அனுமதி அளிக்கவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், வருவாய்த் துறைக்கும், வனத் துறைக்கும் உறவு சுமுகமாக இருக்கிறதா? ஏனென்றால், உள்நாட்டு வெளிநாட்டுப் போர் மாதிரி அங்கே நடந்து கொண்டிருக்கிறது. அதேபோன்று திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் 400 ஆண்டுகளாக சாலை இல்லை. அந்தச் சாலைக்கு வருவாய்த் துறை அனுமதி கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. ஆனால், வனத் துறை மறுக்கிறது. இந்த உறவு சுமுகமாக முடிவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுகொள்கிறேன்.*

2022 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இணையதளத்தில் application வந்திருக்கிறதா என்று பார்த்து அந்த application வந்திருந்தால், எந்த date–ல் அது வந்திருக்கிறது என்று சொன்னீர்கள் என்றால், நிச்சயமாக அதைச் செய்து தருவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

98—

துணை மின் நிலையம்

***3115—திரு. ஓ.எஸ். மணியன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதி, தலைஞாயிறு பேரூராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேதாரண்யம் தொகுதி, தலைஞாயிறு பேரூராட்சியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.